# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரசன்ன வெங்கடேஷ் | Father's Name | : | சுரேஷ் |
| Village | : | மாயனூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 25 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாயனூரில் வசித்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்த ரோபர்ட்டை எனக்கு தெரியும். 09.02.2025 ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆய்வாளர் ரோபர்ட் பிரேதத்தை விசாரணை செய்தபோது நான் சாட்சியாக இருந்தேன். ரோபர்ட்டை கோபி, விக்னேஷ், சத்தியசீலன், சின்ராஜ், அப்பு ஆகியோர் ரீப்பர் கட்டை, கம்பு ஆகியவற்றால் அடித்தும் கல்லை தலையில் போட்டதாகவும் கேள்விபட்டேன்.

SELVA MUTHU KUMARI    Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.29 14:35:51 +0530

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ரோபர்ட் எனக்கு உறவினர் என்றால் சரி. முதல் விசாரணையில் சொல்லியுள்ள நான் கேள்விபட்டதாக சொல்லும் சங்கதிகள் யாவும் கேள்விபடாதவை என்றும் தற்போது ரோபர்ட் எனது உறவினர் என்பதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:35:56 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.142/2025**

**Deposition of Witness for Prosecution PW 15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமார் | Father's Name | : | பொன்னுசாமி |
| Village | : | மாயனூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாயனூரில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 09.02.2025 ம் தேதி மாலை 6.30 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் நான் முதல் சாட்சியாகவும் மருதையன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். சிவனேசனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.14**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் மருதையன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:36:03 +0530

போட்டோம். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.15**. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, போலீசார் கேட்டதால் கையெழுத்துக்களை போட்டுக் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 09.02.2025 ம் தேதி மாலை 5.00 மணியளவில் மன்னார்குடி ரோடு கோரையாறு பாலம் அருகே சிவனேசன் என்பவரை வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரித்தார் எனவும் சிவனேசன் போலீசாரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் மருதையன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் சிவனேசனுடன் ஆய்வாளர் எங்களை புனவாசல் அரசு உயர்நிலைப்பள்ளி அருகே எங்களை அழைத்து சென்று அங்கிருந்து சிவனேசன் ஒரு சவுக்கு கட்டை மற்றும் ஒரு ரீப்பர் ஆகியவற்றை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார் அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார் அந்த கைப்பற்றுதல் மகஜரில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:36:09 +0530

நான் முதல் சாட்சியாகவும் மருதையன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக சம்பவ இடத்தில் கையெழுத்துக்கள் போட்டுவிட்டு காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:36:15 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.142/2025**

**Deposition of Witness for Prosecution PW 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மருதையன் | Father's Name | : | சிங்காரு |
| Village | : | மாயனூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாயனூரில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். 09.02.2025 ம் தேதி மாலை 6.30 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் நான் 2 வது சாட்சியாகவும் குமார் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். சிவனேசனின் ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.16**. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் குமார் முதல் சாட்சியாகவும் கையெழுத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:36:21 +0530

போட்டோம். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.17**. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, போலீசார் கேட்டதால் கையெழுத்துக்களை போட்டுக் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 09.02.2025 ம் தேதி மாலை 5.00 மணியளவில் மன்னார்குடி ரோடு கோரையாறு பாலம் அருகே சிவனேசன் என்பவரை வடபாதிமங்கலம் காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரித்தார் எனவும் சிவனேசன் போலீசாரிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் 2 வது சாட்சியாகவும் குமார் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் சிவனேசனுடன் ஆய்வாளர் எங்களை புனவாசல் அரசு உயர்நிலைப்பள்ளி அருகே எங்களை அழைத்து சென்று அங்கிருந்து சிவனேசன் ஒரு சவுக்கு கட்டை மற்றும் ஒரு ரீப்பர் ஆகியவற்றை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார் அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார் அந்த கைப்பற்றுதல் மகஜரில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:36:27 +0530

நான் 2 வது சாட்சியாகவும் குமார் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம் எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்றுவதற்காக சம்பவ இடத்தில் கையெழுத்துக்கள் போட்டுவிட்டு காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:36:34 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 17**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயமுருகன் | Father's Name | : | கிருஷ்ணன் |
| Village | : | மாயனூர் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாயனூரில் வசித்து வருகிறேன். நான் வடபாதிமங்கலத்தில் கோழி கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 09.02.2025 ம் தேதி காலை 5.00 மணியளவில் நான் என்னுடைய கடையை திறந்தபோது ரவிச்சந்திரன் வீட்டருகே ரோபர்ட் இறந்து கிடப்பதாக கேள்விபட்டு போய் பார்த்தேன். ரோபர்ட் குப்புற கிடந்தார், அவர் தலையில் இரத்தக் காயம் இருந்தது. ரோபர்ட் இறப்பு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரிகள் ரோபர்டை கொலை செய்ததாக பேசிக்

SELVA MUTHU KUMARI    Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.29 14:37:14 +0530

கொண்டார்கள். போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ரோபர்டை கொலை செய்ததாக பேசிக் கொண்டதாக சொல்லும் சங்கதி பொய் எனவும் நான் எதுவும் கேள்விபடவில்லை எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:37:20 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
# Chapter XXIII Code of Criminal Procedure
# IN THE COURT OF SESSIONS JUDGE
# TIRUVARUR
## Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Father's Name | : | நாகையன் |
| Village | : | மாயனூர் | Taluk | : | வடபாதிமங்கலம் |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது மாயனூரில் வசித்து வருகிறேன். நான் LIC Agent ஆக உள்ளேன். அ.சா.1 என் தகப்பனார், இவ்வழக்கில் இறந்த ரோபர்ட் என் உடன் பிறந்த தம்பி. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 08.02.2025 ம் தேதி என் தம்பி ரோபர்டை எதிரிகள் அடித்து கொன்று விட்டார்கள் என சொன்னார்கள். 09.02.2025 ம் தேதி காவல் நிலையம் சென்று பின் பிரேத பரிசோதனை முடிந்தவுடன் என் சகோதரரின் உடலை பெற்று இறுதி சடங்குகள் செய்தோம். ஆஜர் எதிரிகள் என் மகன் பிரசன்ன வெங்கடேஷை அடித்து

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.29 14:37:28 +0530

காயம் ஏற்படுத்தி விட்டார்கள். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் வழக்கு இருந்தது. இந்த சம்பவத்திலிருந்து எதிரிகள் என் தம்பியின் மீது விரோதம் கொண்டிருந்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

என் தம்பி ரோபர்டை எதிரிகள் அடித்து கொன்று விட்டதாக நான் கேள்விபட்டதாக சொல்லும் சங்கதி வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. ரோபர்ட் இறப்பு சம்மந்தமாக நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் கேள்விபட்டேன் என சொன்னால் தவறு. போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் என் மகன் பிரசன்ன வெங்கடேஷை அடித்து காயம் ஏற்படுத்தி விட்டார்கள் எனவும் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் வழக்கு இருந்தது எனவும் இந்த சம்பவத்திலிருந்து எதிரிகள் என் தம்பியின் மீது விரோதம் கொண்டிருந்தார்கள் எனவும் சொல்லவில்லை என்றால் சரி. தற்போது எதிரிகள் மீது முன் விரோதம் இருந்ததாக மேற்படி சங்கதிகளை வழக்கிற்காக நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தவறு. என் மகன் பிரசன்ன வெங்கடேஷை எதிரிகள் அடிக்கவில்லை எனவும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் எனவும் சொன்னால் தவறு. நான் சொன்ன

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:37:35 +0530

முன்விரோதம் சம்மந்தமாக காவல் நிலையத்தில் வழக்குகள் இல்லையென்றால் சரிதான்.

ரோபர்ட் என் சகோதரர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:37:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
# Chapter XXIII Code of Criminal Procedure
# IN THE COURT OF SESSIONS JUDGE
# TIRUVARUR
## Sessions Case No.142/2025

**Deposition of Witness for Prosecution PW 19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராம்பிரசாத் | Father's Name | : | சுரேஷ் |
| Village | : | வடபாதிமங்கலம் | Taluk | : | கூத்தாநல்லூர் |
| Calling | : | | Age | : | 27 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 29th day of January 2026.**

**(A1 to A8 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது வடபாதிமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் ஸ்ரீராம் பைனான்ஸில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்த ரோபர்ட்டை எனக்கு தெரியும். 09.02.2025 ம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆய்வாளர் ரோபர்ட் பிரேதத்தை விசாரணை செய்தபோது நான் சாட்சியாக இருந்தேன். கோபி, திலீப், புதியபாண்டியன், சக்திதாஸ், விக்னேஷ், சுரேந்தர், சிவனேசன், சின்ராஜ் ஆகியோர் ரோபர்டை ரீப்பர் கட்டையால் அடித்தும் கருங்கல்லை தலையில்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.01.29 14:37:48 +0530

போட்டதாகவும் கேள்விபட்டேன். ரோபர்ட் எதிரி சிவனேசனின் தங்கையை திருமணம் செய்து விவாகரத்து ஆகிவிட்டது. அதிலிருந்து இருவருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது. டாஸ்மாக் பார் வைத்திருக்கும் கோபி அவரிடம் வேலைபார்க்கும் சிவனேசனுக்கும் ரோபர்டிற்கும் அடிக்கடி பிரச்சனை இருந்து வந்தது. 11.02.2025 ம் தேதி எதிரி விக்னேஷை போலீசார் கைது செய்து விக்னேஷ் கொடுத்த வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் 2 வது சாட்சியாக பரமானந்தனும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.18**. பின்னர் 2.30 மணியளவில் விக்னேஷ் சவுக்கு கட்டை, கல், ரீப்பர் ஆகியவற்றை போலீசாரிடம் எடுத்து கொடுத்ததை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் முதல் சாட்சியாக ராம்பிரசாத்தும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆகவும் மேற்படி அயிட்டங்கள் சா.பொ.1 முதல் சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

ரோபர்ட் என்னுடைய சித்தப்பா என்றால் சரி. 11.02.2025 ம் தேதி என்னை வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் வரச்சொன்னார்கள், நான் அங்கு சென்றேன்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:37:54 +0530

காவல் நிலையத்தில் விக்னேஷ் இருந்தார். சா.பொ.1 முதல் சா.பொ.5 யை விக்னேஷிடம் கைப்பற்றியதாக போலீசார் என்னிடம் சொன்னார்கள் என்றால் சரி. நான் அ.சா.ஆ.4, அ.சா.5 யை வடபாதிமங்கலம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் சரி. ரோபர்ட் எனது உறவினர் என்பதால் முதல் விசாரணையில் போலீசார் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.01.29 14:38:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.